## ஏப்ரல்– 01 – உயிர்ப்பு ஞாயிறு

### முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள்10 : 34 , 37 –42

அப்போது பேதுரு பேசத் தொடங்கி, ”கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கிறேன்.திருமுழுக்குப் பெறுங்கள் என்று யோவான் பறைசாற்றியபின்பு கலிலேயாமுதல் யூதேயா முழுவதிலும் நடந்தது உங்களுக்குத் தெரியும்.கடவுள் நாசரேத்து இயேசுவின்மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்தால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்.யூதரின் நாட்டுப் புறங்களிலும் எருசலேம் நகரிலும் அவர் செய்த அனைத்திற்கும் நாங்கள் சாட்சிகள். மக்கள் அவரைச் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்றார்கள். ஆனால் கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பிக் காட்சி அளிக்கச் செய்தார்.ஆயினும் அனைத்து மக்களுக்குமல்ல, சாட்சிகளாகக் கடவுள் முன் தேர்ந்துகொண்டவர்களுக்கு மட்டுமே, அவர் காட்சியளித்தார். இறந்த அவர் உயிர்த்தெழுந்தபின்பு அவரோடு உண்டு, குடித்த நாங்களே இதற்குச் சாட்சிகள்.மேலும் வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நடுவராகக் கடவுளால் குறிக்கப்பட்டவர் இயேசுதாம் என்று மக்களுக்குப் பறைசாற்றவும் சான்று பகரவும் அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம் அக்களிப்போம்

### இரண்டாம் வாசகம் : கொலேசேயர் 3 : 1 – 4

சகோதர சகோதரிகளே! நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவாகளானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சாாந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள்.ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது.கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்.

### நற்செய்தி : யோவான் 20 : 1 – 9

வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார் கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன் பேதுருவிடமும் இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்றச் சீடரிடமும் வந்து, ”ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை!” என்றார். இதைக் கேட்ட பேதுருவும் மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர்இருவரும் ஒருமித்து ஓடினர். மற்றச் சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து பார்த்தபோது துணிகள் கிடப்பதைக் கண்டார் ஆனால் உள்ளே நுழையவில்லை. அவருக்குப் பின்னாலேயே சீமோன் பேதுருவும் வந்தார். நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்குத் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பின்னர், கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச் சீடரும் உள்ளே சென்றார், கண்டார் நம்பினார். இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை.

**தியானம்:** இன்றைய நற்செய்திக்கமைவாக தலைமைச்சீடர் பேதுரு இயேசு உயிர்த்தனை நம்பினாரா என்பதனைவிட நாம் நம்பிக்கை கொண்டுள்ளோமா? என்பதை சிந்திக்க அழைப்பு விடப்பட்டுள்ளதனை உணர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். எனினும், இயேசு உயிர்த்துவிட்டாரென நம்பிய சீடர் யோவான் போன்று எமது சொந்த உயிர்த்தெழுதலைக் குறித்துச் சிந்தித்து, உயிர்த்தெழுதல் தொடர்பாக விசேட பணியினை இறைவன் எமக்குக் கொடுத்துள்ளார் என்பதனை நம்புகிறோமா?. இறுதிநாளில் ஆண்டவர் இயேசுவோடு உயிர்த்தெழுதலுக்காக அனுதினமும் எம்மைத் தயார்செய்ய வேண்டுமெனவும் இறைவன் எதிர்பார்க்கின்றார் என்பதனை விசுவசிக்கிறோமா? எமது தனிப்பட்ட வாழ்வாக இருக்கலாம், குடும்ப வட்டத்திற்குள், நாம் ஒன்றிணைந்து வாழும் சமூகத்தில், அல்லது சகவேலையாட்களோடுள்ள தொடர்பாகவும் இருக்கலாம். எதுவாயினும், எமது பாவங்களுக்காகப் பாடுபட்டு, மரணித்து, உத்தானமான கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழ்ந்து இறுதிநாளில் மாட்சிமையோடு வரவிருப்பவரோடு உயிர்த்தெழ நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஆண்டவர் இயேசு கல்லறையில் தன்னை மூடியிருந்த துணிகளை சுருட்டி வைத்துவிட்டு வெற்றி வீரராக எழுந்தது, அதாவது கோதுமை மணி மண்ணில் மடிந்து படிவதுபோல் மடிந்து துளிர்விட்டு ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது (1கொரிந்தியர் 15:46) என்பதனை நினைவுபடுத்துகிறது. அதுபோல நாமும் எம்மை மூடியிருக்கும் பாவப் பழக்கவழக்கங்களைச் சுருட்டி வைத்துவிட்டு புதுக்கிறிஸ்தவர்களாக உயிர்த்தெழ அழைக்கப்பட்டுள்ளோம். உயிர்த்த இயேசுவின் சீடர்களாக வாழ்வதோடு எமக்கென ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கும் வானுலக சீவியத்திற்காக எம்மைத் தயார் செய்வோம். ஏனெனில் ஒவ்வொரு தவக்காலத்தின் இறுதியிலும் உயிர்ப்பு ஞாயிறு வருவது போன்று எமது தனிப்பட்ட வாழ்வின் இறுதியிலும் எமக்கு நிட்சயமாக மரணம் காத்திருக்கின்றது. ஆனால், இன்று கிறிஸ்தவர்கள் எனப்படும் எமது மத்தியிலே நடப்பதென்ன? எத்தனை வேற்றுமைகள், முரன்பாடுகள், சபைகள், பிரிவினைகள். வேறுபாடுகள். புறக்கணிப்புக்கள். ஒதுக்கி வைப்புக்கள். இவையெல்லாம் கிஸ்தவமா? இதற்காகவா ஆண்டவர் கிறிஸ்து அனைவரது பாவங்களையும் தன்மேல் சுமந்து, பாடுபட்டு, சாவினையும் வெண்றெடுத்து இவல்லமையின் தேவனாக உத்தானமாகினார்? கிறிஸ்து யேசுவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடும் இந்நாளில், உத்தானத்தின் ஆண்டவர் என்றும் வலிமை வாய்ந்த வீரரைப்போல, எம்மோடு கூடவிருந்து எங்கள் ஒவ்வொருவவரையும் இறுதிநாள்வரை வழிநடத்திட வேண்டுமென உருக்கத்தோடு வேண்டுதல் செய்வோம்.